# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்


## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2018

| தரம் - 7 | கணிதம் | நேரம் : 2.00 மணித்தியாலம் |
| --- | --- | --- |

சுட்டெண் :- ..............................

### பகுதி –I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1)  நிழற்றிய பகுதியை பின்னமாகத் தருக.

..............................................................................

2) 12, 6, 24 இன் பொ.கா.பெ யாது?

..............................................................................

3) 2000.02.10 ம் திகதி பிறந்த ஒருவர் எந்த சகாப்தத்தைச் சேர்ந்தவர்?

..............................................................................

4) சுருக்குக. $4x + 3y - x + 2y$

..............................................................................

5) $a = 3$ எனின் $8 - 2a$ இன் பருமனைக் காண்க.

..............................................................................

6) 8kg 400g தேயிலையை 150g கொண்ட பக்கற்றுகளாக எத்தனை பக்கற்றுகளை தயாரிக்கலாம்?

..............................................................................

7) தீர்க்க $4x - 3 = 9$

..............................................................................

8) $49\text{m}^2$ பரப்பளவைக் கொண்ட சதுரவடிவ மேடையொன்றின் ஒரு பக்க நீளம் யாது?

..............................................................................

9) $P\hat{Q}R = 235^0$ ஆகுமாறு கோணமொன்றை வரைக.

10) $(-5) + \square = (-2)$ இல் வெற்றுக் கூட்டில் வரவேண்டிய எண் யாது?

..............................................................................

11) $x = 3,\ y = 2,$ எனின் $xy^2$ இன் பெறுமானத்தைக் காண்க.

..............................................................................



kalvi.lk

12) சமபக்க முக்கோணி ஒன்றின் ஒருபக்க நீளம் 7cm 5mm எனின் அதன் சுற்றளவு யாது?

.......................................................................................................

13) ஒரு பிள்ளையின் ஐந்தாவது பிறந்த தினம் 2002. 08. 26 அன்றாகும். அப்பிள்ளையின் பிறந்த திகதியை நியம முறையில் எழுதுக.


.......................................................................................................

14) 1500l கொள்ளளவுடைய நீர்த்தாங்கியொன்று முழுமையாக நீரினால் நிரப்பப்பட்டுள்ளது. குடும்பமொன்று முதல் நாள் 700l 250ml நீரைப் பயன்படுத்தியது. எனின் மறுநாள் பாவனைக்காக தாங்கியிலுள்ள நீரின் அளவைக் காண்க.?

.......................................................................................................

15) 8320 ÷ ☐ = 8.32 இல் வெற்றுக்கூட்டல் வரவேண்டிய எண் யாது?

.......................................................................................................

16) 


கோண அடிப்படையில் இம்முக்கோணி எவ்வகையைச் சார்ந்தது?

.......................................................................................................

17) கனவுரு வடிவ மரக்குற்றியொன்றின் கனவளவு 400cm$^3$ ஆகும். அதன் நீளம், அகலம் என்பன முறையே 10cm, 8cm அதன் உயரத்தை காண்க.

.......................................................................................................

18) P = {ஆங்கில உயிரெழுத்துக்கள்} தொடை P இன் மூலகங்களை இரட்டை அடைப்பினுள் எழுதுக.?

.......................................................................................................

19) நாணயம் ஒன்றைச் சுண்டும் போது கிடைக்கும் எல்லாப்பேறுகளையும் எழுதுக.

.......................................................................................................

20) நீங்கள் விரும்பிய தளவுருவை உபயோகித்து தூய தெசலாக்கம் ஒன்றை வரைக.

(20 x 2 = 40 புள்ளிகள்)





kalvi.lk

## பகுதி – II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக..**

01)

(a)




மேலே தரப்பட்டுள்ள தெக்காட்டின் தளத்தைப் பயன்படுத்தி,

(i) A, B ஆகிய புள்ளிகளின் ஆள்கூறுகளைத் தருக.

(ii) இவ் ஆள் கூற்றுத்தளத்தில் C (7,4), D (3 , 4) ஆகிய புள்ளிகளை குறிக்க.

(iii) புள்ளிகளை $A \rightarrow B \rightarrow C \rightarrow D \rightarrow A$ என்ற ஒழுங்கில் இணைக்க.

(iv) பெறப்பட்ட தளவுருவின் சிறப்புப் பெயரைக் குறிப்பிடுக.

(b)

(i) 4cm ஆரையுடைய வட்டம் ஒன்றை அமைக்க.

(ii) அதன் மீது 4cm பக்க நீளமுடைய ஒழுங்கான அறுகோணியை அமைக்க.

(iii) பெறப்பட்ட அறுகோணியின் உச்சிகளை A, B, C, D, E, F என ஒழுங்காக பெயரிடுக.

(iv) புள்ளிகள் D, F ஐயும், B, D ஐயும், B, F ஐயும் இணைக்க.

(v) $\Delta BDF$ பக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எவ்வகையான முக்கோணி ஆகும்?

(vi) $B\hat{D}C, B\hat{C}D$ என்னும் கோணங்களை அளந்து எழுதுக.

(2+2+1+2+1+1+1+2+2+2=16 புள்ளிகள்)



kalvi.lk

02)

(a) ஒருவர் தனது மாத வருமானத்தை உணவு, உடை, ஏனைய செலவினம் என்பவற்றிற்கு 5 : 3 : 4 எனும் விகிதத்தில் பயன்படுத்துகின்றார். உடைக்கான செலவிடும் பணம் ரூ 15000 எனின் அவர்

(i) உணவிற்காக பயன்படுத்தப்படும் பணம் எவ்வளவு?

(ii) ஏனைய செலவினங்களுக்காக பயன்படுத்தப்படும் பணம் எவ்வளவு?

(iii) அவரது மாத வருமானம் யாது?

(b)

(i) 65 % ஐ எளிய பினன்னமாகத் தருக.

(ii) வியாபாரி ஒருவர் 80 மாம்பழங்களைக் கொள்வனவு செய்கின்றார். விற்பனையின் போது 20 மாம்பழங்கள் பழுதடைந்து காணப்பட்டன. விற்பனை செய்யப்பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கையை சதவீதமாகத் தருக.

(2+2+2+2+3 = 11 புள்ளிகள்)

03)

(i) பெறுமானம் காண்க. $5\frac{3}{10} - 3\frac{2}{5}$

(ii) பெறுமானம் காண்க. $1\frac{2}{3} + 2\frac{5}{6} + \frac{3}{5}$

(iii) சுருக்குக. $3 + 6 \times (5 + 4) \div 3$


(iv) $1\frac{7}{8}$ எனும் பின்னத்தை தசம எண்ணத்தை தருக.

(v) நெட்டாண்டு ஆரம்பத்தில் இருந்து ஒவ்வொரு நாளும் ரூபா 5 ஐ உண்டியலில் இடும் ஒருவர் நெட்டாண்டு முடிவில் சேகரிக்கும் பணம் எவ்வளவு.

(2+2+3+2+2 = 11 புள்ளிகள்)

04)

(a)



சதுர அடிக் கூம்பகம் ஒன்றும் சதுரமுகி ஒன்றும் இணைத்து ஆக்கப்பட்ட கூட்டுத்திண்மம் உருவில் காட்டப்பட்டுள்ளது. இக் கூட்டுத் திண்மத்தின்,

(i) முகங்களின் எண்ணிக்கை யாது?

(ii) விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

(iii) உச்சிகளின் எண்ணிக்கை யாது?

(iv) மேற்படி பெறுமானங்கள் ஓயிலரின் தொடர்புடன் பொருந்துகின்றதா என்பதைக் காரணங்களுடன் குறிப்பிடுக.

(b) நீர் விரும்பிய தளவுருக்களை உபயோகித்து அரைத் தூய தெசலாக்கம் ஒன்றை நிர்மாணிக்க.

(2+2+2+2+3 = 11 புள்ளிகள்)



kalvi.lk

05) குறித்த பாடசாலையொன்றின் தரம் 7 இல் ஒரு வாரத்தில் பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்களின் விபரம் பின்வருமாறு காணப்பட்டது.

| நாள் | மாணவர் எண்ணிக்கை | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| திங்கள் | 18 | 16 |
| செவ்வாய் | 17 | 19 |
| புதன் | 19 | 19 |
| வியாழன் | 20 | 20 |
| வெள்ளி | 17 | 18 |

(i) மேற்படி தரவினை கூட்டுச் சலாகை வரைபு மூலம் காட்டுக.


(ii) எந்தெந்த நாட்களில் ஆண்பிள்ளைகளினதும் பெண் பிள்ளைகளினதும் வரவு சமமாகக் காணப்பட்டது.

(iii) அவ்வாரத்தில் தரம் 7 இன் மொத்த மாணவர் வரவினைக் காண்க.

(iv) அவ்வாரத்தில் வெள்ளிக்கிழமை சமய நற்பணிக்காக ஒவ்வொரு மாணவரும் ரூ 5 ஐ வழங்கினர். எனின் அவ்வகுப்பிலிருந்து சேகரிக்கப்பட்ட பணம் எவ்வளவு?

(5+2+2+2 = 11 புள்ளிகள்)

06) ஒரு பாடசாலைக் கட்டமொன்றின் கீழ்த்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள வகுப்பறைகள், விஞ்ஞான ஆய்வுகூடம், விறாந்தை என்பவற்றின் கிடைப்படம் கீழே உருவில் காட்டப்பட்டுள்ளது.




**அளவிடை 1 : 200**

(i) வகுப்பறையின் உண்மையான நீளம், அகலம் எவ்வளவு?

(ii) விஞ்ஞான ஆய்வுகூடத்தின் உண்மையான நீளம், அகலம், எவ்வளவு

(iii) விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கு ஒரு பக்க நீளம் 60cm ஆகவுடைய சதுரவடிவ தரையோடுகள் பதிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான தரையோடுகளின் எண்ணிக்கையைக் காண்க.

(iv) தரையோடு ஒன்றின் பெறுமதி ரூ700 எனின் தரையோடுகளுக்கு செலவாகும் பணத்தைக் காண்க.

(2+3+3+3 = 11 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி Kalvi.lk

Whatsapp
075 287 1457